## காலநிலை பின்னடைவு முன்னேற்ற செயற்திட்டம் - 2014

காலநிலை பின்னடைவு முன்னேற்ற செயற்திட்டத்தின் 2014 ஆகஸ்ட் 05 முதல் 2014 திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூலை 10 ஆந் திகதிய 5417-எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 4.09(பீ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

காலநிலை பின்னடைவு முன்னேற்ற செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் படி, முன்னாள் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு தற்போதைய நீர்ப்பாசன அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. ஆபத்தான காலநிலைக்கு மக்கள் மற்றும் சொத்துக்கள் வெளிப்படுத்திய பாதிப்புக்களை குறைப்பதற்கும் இடர்களிற்கு திறம்பட பதிலளிப்பதற்கு இயலளவை அதிகரித்தலுமே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளது. நிதியளிப்பு உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,617 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 111.8 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 14,382 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியன் அல்லது 98.39 சதவீதம் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 ஆகஸ்ட் 05 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 மே 30 அளவில் பூர்த்தியாக்க வேண்டுமன பட்டியலிடப்பட்டது.

**நிதியளித்தல் திட்டம்**

செயற்திட்ட உடன்படிக்கையின்படி, கீழே காட்டப்பட்டவாறு உள்நாட்டு நிதிகள் உள்ளடங்களாக செயற்திட்டத்தின் நிதியளித்தல் திட்டம் ஐ.அ.டொலர 111.8 மில்லியன் ஆகும்.

| நிதி மூலம் | கூறு | எஸ்டிஆர் மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|
| ஐடிஏ | தொட்டி முதலீட்டு திட்ட அபிவிருத்தி | 8.45 | 13.0 | 1,700 |
| | காலநிலை மாற்ற உட்கட்டமைப்பினை அதிகரித்தல் | 58.50 | 90.0 | 11,767 |
| | செயற்திட்ட அமுலாக்கம் | 3.25 | 5.0 | 654 |
| | நிகழத்தக்க அவசர பதிலளிப்பு | 1.30 | 2.0 | 262 |
| இலங்கை அரசாங்கம் | செயற்திட்ட அமுலாக்கம் | - | 1.8 | 234 |
| | **மொத்தம்** | **71.7** | **111.8** | **14,617** |

நாணயமாற்று வீதம்: ஐ.அ.டொலர் 1= இ.ருபா 130.75

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புகள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் ஆகியவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனையிலிருந்து தென்படுகின்ற மற்றும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான

விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2014 இற்காக பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஐடிஏ | 110.0 | 14,382 | 220.81 | 132.7 | 1.02 | 132.7 |
| இலங்கை அரசாங்கம் | 1.8 | 235 | - | 13.9 | - | 13.9 |
| **மொத்தம்** | **111.8** | **14,617** | **220.81** | **146.6** | **1.02** | **146.6** |

(ஆ) கடன் பெறுகைகளில் செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செயல்நடவடிக்கை திட்டத்தில் ரூபா 221 மில்லியன் தொகையான ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் கீழே குறிப்பிடப்பட்டவாறு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 60 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 132.8 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

| கூறு | ஒதுக்கீடு | உள்ளபடியான செலவினம் | பயன்பாடு % |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| தொட்டி முதலீட்டு திட்ட அபிவிருத்தி | - | - | |
| காலநிலை மாற்ற | 214.41 | 130.32 | 61 |

| | | | |
|---|---|---|---|
| உட்கட்டமைப்பினை அதிகரித்தல் | | | |
| செயற்திட்ட அமுலாக்கல் | 6.40 | 2.48 | 39 |
| நிகழத்தக்க அவசர பதிலளிப்பு | - | - | |
| மொத்தம் | 220.81 | 132.8 | |

### 3.2 பௌதீக செயலாற்றல்

குறித்த செயற்திட்ட காலப்பகுதிக்குள் சிக்கனமான மற்றும் வினைத்திறனான வழிகளில் முன்னர் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதலை உறுதிப்படுத்துவதற்கு செயற்திட்ட ஆரம்பத்தில் முழு செயற்திட்ட காலத்திற்காகவும் ஒட்டு மொத்த செயற்திட்ட திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், மீளாய்வு காலப்பகுதியின் போது செயற்திட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு அத்தகைய செயற்திட்ட திட்டம் மற்றும் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் கணக்காய்வில் மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 3.3. நிதிக் கட்டுப்பாட்டு விடயங்கள்

மீள்நிதியிடப்பட வேண்டுமென்ற அடிப்படையில் திறைசேரியிடமிருந்து நிதிகள் பெறப்படுவதிலுள்ள தாமதங்களை தவிர்ப்பதற்கு செயற்திட்டத்தின் செலவினங்களை செய்வதற்கு 2014 ஒக்தோபர் 02 இல் உள்ளூர் வர்த்தக வங்கியொன்றில் விசேட (டொலர்) முற்பணக்கணக்கும் திறக்கப்பட்டிருந்தது. மீளாய்வு காலத்தின் போது ரூபா 97.79 மில்லியன் தொகையான மீளெடுப்புக்களை செய்வதற்கு முற்பணங்களாக இரண்டு தடவைகள் ரூபா 100 மில்லியன் தொகை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,830 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.97 மில்லியன் விசேட டொலர் கணக்கின் மீதிக்கு மேலதிகமாக கணக்கில் ரூபா 2.21 மில்லியன் மீதி இருந்தது.

### 3.4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தால் நியமனக் கடிதம் வழங்கப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வு காலத்தின் போது அரச நிறுவனங்களிடமிருந்து விடுவிக்கப்பட்ட 400 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 13.9 மில்லியன் தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) முழு நேர அடிப்படையில் அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டமிடல் செயற்திட்டத்தில் வேலை செய்கின்ற ஆறு உத்தியோகத்தர்கள் எந்தவொரு நியமனக் கடிதங்களும் இல்லாமல் 1/3 படியாக மீளாய்வாண்டின் போது ரூபா 1.4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.